
# புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிப்பது தேவனுக்கு அருவருப்பானது





# உபாகமம் 22:5

**புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது; அப்படிச் செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.**



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **இனி வரப்போகும் காரியங்கள்,** டிசம்பர் 5, 1965, ரியால்டோ, கலிபோர்னியா, அமெரிக்கா

72. ஓ, சகோதரனே, சகோதரியே, நாம் வாழும் இவ்வுலகில் நீயும் நானும் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாக நடந்து கொள்வோம்.

நாம் இங்கு அந்நியர். ஆனால் நம்முடைய நடத்தை, நாம் தேவனுடைய குமாரர் குமாரத்திகள் என்னும் நிலையில் தேவனுடைய கட்டளைகளுக்கு ஏற்றதாய் இருக்கவேண்டும்.


தேவன் நமக்கு வகுத்துள்ள பிரமாணத்தின்படி நமது நடத்தை, நாம் புரியும் செயல்கள் அனைத்தும் அமைந்திருக்கவேண்டும்.



புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிப்பது தேவனுக்கு அருவருப்பானது. ஒரு ஸ்திரீ தன் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்ளுதல் தவறானதும் பாவமான செயலுமாகும். வேதம்

அவ்வாறு கூறியுள்ளது. அவள் ஜெபிக்கவும் கூடாது.

நீங்கள், “அதனால் என்ன?” எனலாம்.



73. அண்மையில் பிரபல போதகர் ஒருவர் என்னிடம் வந்து, "சகோ. பிரன்ஹாமே, வாருங்கள், உங்கள் மேல் நான் கைகளை வைக்க விரும்புகிறேன். உங்கள் ஊழியத்தை நீங்கள் பாழாக்கிக் கொள்ளப் போகின்றீர்கள்" என்றார்.

நான், "ஏன்?" என்றேன்.

அவர், "பெண்களை நோக்கி நீங்கள் எப்பொழுதும் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறீர்களே" என்றார்.

"நான் உண்மையைத் தானே..." என்றேன்.





அவர், "ஓ, அது எனக்குத் தெரியும். நானும் ஒரு பெந்தெகொஸ்தேயினன்.

பெண்கள், அவர்கள் இப்பொழுது செய்வது போல், குட்டை தலைமயிர் வைத்துக்கொள்ளக் கூடாது, ஆண்களின் கால்சட்டைகளை அணியக்கூடாது. முகங்களில் வர்ணம் தீட்டக் கூடாதென்று எனக்குத் தெரியும். அவர்கள் அப்படி செய்யக் கூடாததுதான். ஆனால் வியாதியஸ்தருக்கு ஜெபிக்கவே தேவன் உங்களை அழைத்திருக்கிறார்" என்றார்.



“சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அவர் என்னை அழைத்தார்” என்றேன். பாருங்கள்? அவர், “அது எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் நினைக்கிறீர்களா...” என்று கேட்டார்.



நான், “உங்களிடம் என்ன உள்ளதென்று பாருங்கள் - பெரிய நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவை. தேவனுக்கு பதில் கூறுவதைத் தவிர என்னிடம் வேறொன்றுமில்லை” என்றேன்.

அவர், “நான்-நான்-நான்... உங்கள் ஊழியத்தை நீங்கள் பாழாக்கிக் கொள்ளப் போகின்றீர்கள்” என்றார்.

நான், “தேவனுடைய வார்த்தை பாழாக்கும் எந்த ஊழியமும் பாழாக்கப்பட வேண்டியதே” என்றேன். அது உண்மை! நிச்சயமாக. அது முற்றிலும் உண்மை! அவர், “நல்லது, நீங்கள் அதை பாழாக்கி விடுவீர்கள்” என்றார்.

74. நான், “அப்படியானால் யார் அதை அவர்களுக்கு எடுத்துக் கூறுவது? (பாருங்கள்?) யாராகிலும் ஒருவர் அதை எடுத்துக் கூறவேண்டும். சத்தியம் எதுவோ அதற்கு, அது மனம்நோகச் செய்தாலும் யாராகிலும் ஒருவர் உறுதியாக நிற்கவேண்டும்” என்றேன். நண்பர்களே, கிறிஸ்தவர்கள் என்னும்

முறையில், நாம் பரலோகத்துக்கு செல்லப் போகின்றோம் என்று விசுவாசிக்கும் மக்களாயிருப்பதால், பரிசுத்த ஆவியானவரே நம்மை தேவனுடைய வார்த்தைக்கு கொண்டு வருவார்.



அவர், "நீங்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமா? நீங்கள் தீர்க்கதரிசியென்று மக்கள் விசுவாசிக்கின்றனர். எனவே இந்த சிறு

செயல்களைக்கண்டு நீங்கள் குறை கூறுவதற்குப் பதிலாக தீர்க்கதரிசன வரங்களைப் பெறுவது எப்படியென்று நீங்கள் பெண்களுக்கு கற்றுத்தர வேண்டும்" என்றார்.



75. நான், "மொழியின் முதலெழுத்துக்களாகிய அ, ஆ, இ யைக் கற்க மறுக்கும் இவர்களுக்கு என்னால் எப்படி அல்ஜீப்ரா கணிதத்தை கற்றுத்தர முடியும்? சாதாரண, இயற்கையான காரியங்களை செய்ய மறுக்கும் இவர்களுக்கு மேலான காரியங்கள் எப்படி நீங்கள் போதிக்க முடியும்? அவர்கள் கீழிருந்து தொடங்கவே மறுக்கின்றனரே" என்றேன். நீங்கள் ஏணியில் முதல் படியில் காலெடுத்து வைக்காமல், உச்சப்படியை அடைய முயல்கின்றீர்கள். அதனால்தான் நீங்கள் விழுந்து போகின்றீர்கள். பாருங்கள்?

நீங்கள் கீழே தொடங்கி, தேவன் உங்களை மேலே வழிநடத்தும் விதமாகவே, மேலேறிச் செல்லுங்கள். பாருங்கள்?

உங்கள் வாழ்க்கையை நீங்கள் சரிவர அமைத்து கொண்டு, தேவன் உங்களுக்கு நியமித்துள்ளப்படியே வார்த்தையின் ஒவ்வொரு அம்சத்தையும் பின்பற்றுங்கள்.



76. இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள், தேவன் எப்படி... நாம் கிறிஸ்தவர்களைப் போல் நடந்து கொள்ள வேண்டும். நமது நடத்தை கிறிஸ்தவர்களின் நடத்தையைப்போல்

இருக்க வேண்டும். நாம் இங்கு அந்நியராயிருக்கிறோம். இது நம்முடைய வீடல்ல. இல்லவே இல்லை. நாம் இங்கு தற்காலிகமாகவே வைக்கப்பட்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் இங்கிருந்து செல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம்.



★★★★★

*(குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. நன்றி.)*